Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-9 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடிஅரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 10 8-1948 ஆடிமீ 26௳ { மலர் 44

## பட்டம் பறக்குதடி பாப்பா!

("குத்")

முஸ்லிம் லீகினர் பட்டங்களைத் துறந்து விட்டனர். ஆனால் இங்கு பட்டம் துறப்பதற்குப் பயந்த அரசியல் தலைவர்கள் திராவிடர் கழகத்தைவிட்டு நழுவி விட்டனர். கீழேயுள்ள உரையாடல் கற்பனைதான். ஆனாலும் கருத்துச் செறிந்தது. ஆ-ர்)

இடம்:- முச்சந்தி.
வேளை: மாலை 4-மணி.

பட்டாபிராமய்யர்:- ஓய், முதலியாரே!- முஸ்லிம் லீக் காரர்கள் பட்டத்தைத் துறந்துவிட்டார்களாமே, கேள்விப்பட்டீரோ?

பட்டப்பற்று முதலியார்:- எல்லாம் இந்தக் காந்தியைப்பார்த்துக் காப்பியடிக்கிறதுகள்! இதிலே ரொம்ப வீரம் வேண்டியிருக்கோ? ஏதோ பொதுஜனங்களை ஏமாற்றுகிற வித்தை தானே இது?

அய்யர்:- அப்படியானால் நீயும் உமது 'திவான் பகதூர்' பட்டத்தை வீசி எறிந்துவிட்டுப் பொதுஜனங்களை ஏமாற்றுகிறது தானே! வீரமில்லாத செய்கையை நீரும்தான் செய்து பாருமே!

முதலியார்:-முடியாதானென்ன? இங்கிலீஷ்காரன் மட்டும் இன்றைக்கே போய்விடட்டும்! நான் பட்டத்தை வீசி எறிகிறேனா, இல்லையா, பாரும்! ஏதோ, அவன் இருக்கிறவரைக்கும் ரெண்டொரு வேலை கிடைத்தாலும் கிடைக்குமே, அதை ஏன் கெடுத்துக்கொள்ளவேண்டும் என்று யோசிக்கிறேன்.

அய்யர்:- அப்படிச் சொல்லும்! அதுக்குத்தான் 'வீரம்' என்று பேர்! சாகிறவரையில் சம்பாதிக்கவேணுமென்று ஆசைப்படும் உம்மைப்போன்றவர் பட்டம் விடுவதென்றால், நெஞ்சடைத்துவிடாதா?

ஆமாம்! உங்க திராவிட சங்கம்கூடப் பட்டத்தை விடச் சொல்றதே! நீர் ஏன் விடக்கூடாது?

முதலியார்:-ஓய்! அய்யரே! "என் திராவிட சங்கம்" என்று சொல்லாதேயும், இன்னொரு தரம் அதில் என்னைப்போன்ற பெரிய மனுஷாள் யாருமே இல்லை, தெரியுமா? எல்லாம் பள்ளிக்கூடத்துப் பசங்களும், முரட்டு அன்னக்காவடிகளும் தான் அதிலே இருக்குதுகள்!

அய்யர்:- அப்படியானால் உமது கட்சிதான் எது? பட்டம் வெச்சிருக்கீர். ஆகையால் காங்கரசுமில்லை, திராவிடர் கழகமுமில்லை, கம்யூனிஸ்ட்டாகவும் இருக்க முடியாது. வேறு எந்தக்கட்சியில்தான் சேர்ந்திருக்கிறீர்?

முதலியார்:- என்னங்காணும் பைத்தியக்காரராயிருக்கிறீர்? மனுஷனென்றால் ஏதாவது ஒரு கட்சியில் இருக்கவேண்டுமென்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கோ? நீர்தான் காங்கரஸ் கட்சியில் இருக்கிறீர்" 1919ம் வருஷத்திலேயே காந்தி பேச்சைக்கேட்டு 'ராவ்பகதூர்' பட்டத்தை விட்டீர்! உம்மைப்போலவா எல்லாரும் இருக்கிறார்கள்?

ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரைப் பாரும்! அவர் ஒரு கட்சியிலும் இல்லாமல் இருக்கிறாரே! அவர் பட்டம் விடாமல் இருக்கிறாரே! அவரைக் காங்கரஸ்காரர் ஆதரிக்காமலா இருக்கிறார்கள்?

கோபாலசாமி அய்யங்காரைப் பாரும்! அவருக்கு 'ஸர்' பட்டமில்லையா? காங்கரஸ்காரர் அவரைத் தாங்குதாங்கென்று தாங்குகிறார்களே! அது ஏன்? போங்காணும்; போம்!

அய்யர்:-அல்லாடியையும் அய்யங்காரையும் சொல்லித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறீரே! அவர்கள் எந்த நேரத்திலும் பட்டம் விடத்தயாராயிருக்கிறார்கள், தெரியுமா? நாங்களெல்லாம் பட்டம்விட்டு, சிறைக்குப் போன காங்கரஸ்காரர்கள். அல்லாடி-அய்யங்கார் போன்றவர்கள் பட்டம் விடாது, இன்ற

செல்லாத காங்கிரஸ்காரர்கள். அவ்வளவுதான் வித்தியாசம். மகாத்மாவுக்குத் தெரியும் இந்த உண்மை.

காங்கிரசுக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையில் தூது போவதற்கு ஆள் வேண்டுமே! அதற்காக இவர்களை வைத்திருக்கிறோம், நாங்கள். ஏதாவது தகராறு ஏற்பட்டால், "சாப்ருவைக் கேளுங்கள்! அல்லாடியைக் கேளுங்கள்! கோபாலசாமி அய்யங்காரை விசாரிக்கச் சொல்லுங்கள்" என்று சொல்லி விடுவோம்!

இவர்கள் விசாரித்தால் என்ன? காந்தி—நேரு—பட்டேல் விசாரித்தால் என்ன? முடிவு ஒன்றுதானே!

இது விஷயம் உமக்குமட்டும் இரகசியமாய்ச் சொல்கிறேன். வெளியே சொல்லித் தொலைக்காதேயும்!

முதலியார்:- ஓஹோ! உங்களுக்குள் இவ்வளவு போம் நடக்கிறதா? எனக்கு இது வரையில் ஒன்றுமே தெரியாதே!

(மனதைத் திடப்படுத்திக் கொள்கிறார்)

அதுசரி! அவர்களைப் போலவேதான் நாங்களும் எங்கள் கட்சிக்கு மறைமுகமாக உதவி செய்து வருகிறோம்; தெரியுமா? இன்றைக்கே பட்டத்தைவிடச் சொன்னால்கூட விடத் தயாராயிருக்கிறேன். அந்த இரகசியமெல்லாம் எதிர்க்கட்சியைச் சேர்ந்த உமக்கு ஏன் சொல்லவேண்டும் என்று நினைத்துச் சும்மா இருந்தேன்.

நான் எமது கட்சிக்காக என்னென்ன செய்திருக்கிறேன் தெரியுமா?

ஜின்னாய் இங்கே வந்திருந்தாரே; அப்போது 'டீபார்ட்டி' கொடுத்தேன்.

ஸர் ஆர்தர் ஹோப் இருந்தாரே; கவர்னர்! அவரை எங்களூருக்கு வரவேற்பதற்கு 10,000 ரூபாய் நன்கொடை கொடுத்தேன்.

கஸ்தூரிபா நிதிக்குக்கூட....

(..............என்று சொல்லும்போது, "அடைந்தே தீருவோம்! திராவிடநாட்டை!", "திராவிடம் வாழ்க!", "ஆரியம் வீழ்க!" என்ற ஆரவாரம் கேட்டது. முதலியாரும் அய்யரும் திடுக்கிட்டுத் திரும்பினர். தொலைவில் அரை மைல் நீளத்திற்குக் கருஞ்சட்டைப்படை ஊர்வலம் வந்துகொண்டிருப்பதைக் கண்டனர்)

அய்யர்:- ஓய்! முதலியார்! எங்காணும் இப்படி ஓடுவீர்! இன்னுங் காணும்! நானும் வரேன்!

(இருவரும் மற்றொரு தெரு வழியாக நடந்தனர், மோட்டார்கார் போகும்வேகத்தில் ஊர்வலம் நெருங்கியது. "சுயநலம் ஒழிக! சுயமரியாதை ஓங்குக!! விபீஷணீயம் அழிக! வீரம் பொங்குக!!!" என்ற ஒலிகள் காதைத் துளைத்தன)

## கழகம் அமைத்தார்கள்

30-6-46ல் புலியகுளம் திராவிடர் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்று, ஐ. மதலைமுத்து, எஸ். பி. ஆரோக்கியசாமி ஆகிய தோழர்கள் முறையே தலைவராகவும், துணைத் தலைவராகவும், கே. மாரிமுத்து, டி. மருதாசலமூர்த்தி ஆகிய தோழர்கள் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முனிசிபல் வாசகசாலையில் விடுதலைப் பத்திரிகைப் போடவேண்டிய அவசியத்தைப்பற்றியும், கிருஷ்ணன்—பாகவதர் விடுதலைக் குறித்தும், காங்கிரஸ் ஆட்சியில் பிற்போக்கான கல்வித் திட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

## இன்னிசை வேளாளர் சங்கம்

29-7-46ல் புலிவலம் இன்னிசை வேளாளர் சங்கத்தின் சார்பில் தோழர் திரு. சி. மாசிலாமணி அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில், குப்புசாமி, வி. கணேசன் ஆகிய தோழர்கள் சமூக முன்னேற்றத்தைப் பற்றி பேசினார்கள்.


## மணமகள் தேவை

நல்ல உயர் குடியிற் பிறந்தவரும், நன்கு படித்து தற்பொழுது கவர்மெண்டு உத்தியோகத்திலிருக்கும் 25 வயதுடைய இந்துமதத்தைச் சார்ந்த வாலிபருக்கு 18-முதல் 22 வயதுடைய நல்ல அழகுள்ள ஹயர் கிரேட் படித்த விவாகமாகாத மணமகள் தேவை. குறைந்தபட்சம் 3வது பாரமாவது படித்திருக்கவேண்டும். எம்மதமாயினும் சம்மதமே. கடிதப் போக்குவரத்து இரகசியமான முறையில் வைக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட, விலாசத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

M. C/o மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.


## பிறப்பு

போளூர் தாலுக்கா கடலாடிவட்ட திராவிடர் கழக செயலாளர் தோழர் கே. எம். தியாகராஜன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் விருத்தாம்பிகை அம்மையாருக்கு 31-7-46ல் ஓர் பெண்மகவு பிறந்தது. குழந்தைக்குக் கண்ணகி என்று பெயரிடப்பட்டது. இதன் நினைவாக குடியரசு வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று வரப்பெற்றோம்.

o o

7-7-46ல் குறிஞ்சிப்பாடி தோழர் கு. த. பெ. பழனியப்பன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியாருக்கு ஓர் பெண் குழவி பிறந்தது. அதன் நினைவாக தோழர்களுக்குத் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. தோழர் அர்ச்சுனன் அவர்கள் தலைமையில் ஆர். சரவணன், சி. ராமலிங்கம், கி. கிருஷ்ணசாமி, அமீதுபாய், பாண்டுரங்கம் ஆகிய தோழர்கள் குழந்தைக்கு ஆசி கூறினார்கள். குடி அரசு வளர்ச்சிக்கு 3 ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

o o

22-7-46ல் குறிஞ்சிப்பாடியைச் சார்ந்த மீனாட்சிப்பேட்டையில் தோழர் வி. கோவிந்தசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ஓர் ஆண் மகவு பிறந்ததின் நினைவாக குடியரசுக்கு ஒரு ரூபாய் அளிக்கப்பட்டது.

# இந்திய சுதேச சமஸ்தானங்கள்

[1933ம் ஆண்டில், இந்திய சமஸ்தானங்களின் பாதுகாப்புக்காக "இந்தியாவில் அரசர் பெருமானின் சர்வாதிகாரத்திற்குட்பட்ட சமஸ்தானங்களின் பாதுகாப்புச்சட்டம்" என்று ஒரு சட்டம் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் கொண்டு வரப்பட்டபோது 3-9-33ல் குடியரசில் வெளியிடப்பட்ட கண்டனத் தலையங்கம்]

சுதேச சமஸ்தானங்கள் என்பவைகள் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு வந்தகாலம் முதல்கொண்டே இருந்துவருபவையாகும். சில அதற்கு முன்பு இருந்தே இருந்துவருவனவுமாகும். அப்படியிருக்க இத்தனை காலம் பொருத்து இப்பொழுது அவைகளைக் காப்பாற்ற என்பதாகப் புதியசட்டம் ஒன்று ஏன் செய்யப்படவேண்டும் என்பதைக் கவனித்தால் அதில் ஏதோ ஒரு இரகசியம் இருக்கவேண்டுமென்பது விளங்காமல் போகாது. இதுபோலவேதான் சுமார் 5, 6 வருஷங்களுக்கு முன்னால் மதத்தலைவர்களைக் காப்பாற்ற என்று ஒரு சட்டம் செய்யப்பட்டது. மதங்களும், மதத் தலைவர்களும் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகி இருக்கலாம், அப்படியிருக்க 1927ம் வருஷத்தில் மேல் கண்டபடி "மதத் தலைவர்கள் மீது துவேஷம் உண்டாகும்படியோ, ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு மனவருத்தம் உண்டாகும்படியோ செய்யப்படும் காரியங்களைத் தடுக்க" என்பதாக ஒரு சட்டம் செய்துகொண்டார்கள். இது சமஸ்தான ஆதிக்கங்களைக் காப்பதுபோலவே மத ஆதிக்கத்தைக் காப்பாற்றவே செய்யப்பட்டதாகும். ஆனால் அக்காலத்திலேயே இதைப்பற்றி நாம் மதக் கொள்கைகள் அறிவுக்கும், மனிதனுடைய சுயேச்சைக்கும் விரோதமாய் இருக்குமானால் அதை ஆட்சேபிக்கவோ எவருக்கும் உரிமை இருக்கக் கூடாது என்று சட்டம் செய்வதானது பகுத்தறிவைத் தடுத்து மூட நம்பிக்கையும், அடிமைத்தனத்தையும் வளரச் செய்வதாகுமென்று சொல்லி பலமாக ஆட்சேபித்திருந்தோம். அது சமயம் இந்தியா முழுவதிலுமே நம்மைத் தவிர வேறுயாரும் இவ்விதமான கொடுங்கோன்மை அடக்குமுறைச் சட்டத்தை ஆட்சேபித்ததாகத் தெரியவில்லை. இந்திய சட்டசபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களும் அச்சட்டத்தை ஆதரித்தார்கள் என்றாலும் நம் ஆட்சேபனையின் பலனாக ஏதோ சில மாறுதல்கள் மாத்திரமே செய்யப்பட்டது.

ஒருவரையொருவர் தூஷித்தால், ஒருவர்மேல் ஒருவருக்குத் துவேஷம் உண்டாகும்படி நடந்துகொண்டால் அதைத் தண்டிக்க ஏற்கனவே சட்டம் இருந்துவந்தும் திடீரென்று "மதத் தலைவர் பாதுகாப்பு" சட்டத்தைஉண்டாக்கிவிட்டார்கள். அந்தப்படி ஒரு சட்டம் செய்யவேண்டுமென்று அந்தக்காலத்தில் சர்க்காருக்கு முதன்முதலில் யோசனை சொன்னவர் ஒரு (சென்னைமாகாணத்து) தமிழ்நாட்டுப் பார்ப்பனரேயாகும். சுயமரியாதை இயக்கத்தின் போக்கைப்பற்றி அநேக பார்ப்பனர்கள் அக்காலத்தில் பத்திரிகையில் ஓலமிட்டதைப் பார்த்தே ஒரு சட்ட நிபுணப் பார்ப்பனர் 'ரங்கிலா ரசூல்' என்ற துண்டுப் பிரசுரத்தை சாக்காக வைத்து இம்மாதிரி யோசனை சொன்னவுடன் அரசாங்கத்தார் இதே சாக்கென்று ஒருவாரத்தில் சட்டம் கொண்டுவந்து எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றிக்கொண்டார்கள்.

போதாக்குறைக்கு இப்பொழுது இந்திய சுதேச சமஸ்தானங்களைப் பற்றி யாரும் அந்த சமஸ்தானங்கள் மீதோ, சமஸ்தானாதிபதிகள் மீதோ துவேஷம் உண்டாகும்படி பேசவும், எழுதவும் கூடாது என்பதாக ஒரு சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். இதை எந்த தேசியவாதிகளும் எதிர்த்து சரியாக ஆட்சேபிப்பதாகத் தெரியவில்லை.

ஒரு தேசத்தை, அல்லது ஒரு சமூகத்தை ஒருவர் ஆட்சிபுரிவது என்பது அந்த தேசத்து மக்களின் நன்மைக்காகவே ஒழிய ஆட்சி புரிவோரின் நன்மைக்காக அல்லவென்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நியாயமாகும். அப்படியிருக்க ஒருவருடைய நன்மைக்காகச் செய்யப்படும் ஆட்சியில் உள்ள குறைகளைத் திருத்தவோ, மாற்றவோ ஒருதேச மக்களுக்கோ உரிமை இல்லையென்று சொல்வதானால் அந்த ஆட்சியை மனிதத்தன்மைகொண்ட ஆட்சி என்று எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும்? ஒரு ஆட்சியின் குறைகளை, கொடுமைகளை உண்மையாய் உள்ளபடி வன்மையாய் எடுத்துச் சொல்லும்போது குற்றமிருக்கிறவர்கள் மீது அதாவது குறை ஏற்படும்படியான ஆட்சி செலுத்துபவர்கள் மீது யாருக்கும் அதிருப்தியோ, வெறுப்போ, துவேஷமோ உண்டாவது இயற்கையேயாகும். அப்படியிருக்க ஒருவர்மீது துவேஷமுண்டாகும்படி ஒருவர் பேசினால் அது குற்றமென்றால் யார் என்ன செய்தாலும், எப்படி ஆட்சியை நடத்தினாலும் பேசாமல் சகித்துக்கொண்டு அடங்கி இருக்கவேண்டுமென்பதுதான் அதன் கருத்தாகும். அனாவசியமாய் பொய்யாய் ஒருவர்மீது துவேஷமுண்டாகும்படி ஒருவர் நடந்துகொண்டால் அதற்கு ஏற்கனவே சட்டமிருந்து வருகின்றது என்பதை மேலே காட்டி இருக்கின்றோம். அதுபோராது என்று இப்போது தனிச்சட்டம் செய்வதானது யோக்கியமான முறையல்லாமல் அடக்குமுறைமூலம் மக்களை அடக்கிஆள செளகரியம் செய்துகொள்வதேயல்லாமல் இதை நியாயமென்றோ, நல்ல அரசாட்சி முறையென்றோ சிறிதும் சொல்லமுடியாது.

இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான சுதேச சமஸ்தானங்களின் யோக்கியதையானது அநேக விஷயங்களில் பிரிட்டிஷ் இந்திய ஆட்சியைவிட அநேக மடங்கு மோசமானதென்று தைரியமாய்ச் சொல்லுவோம். தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால் அநேக சுதேச சமஸ்தானங்களின் ஆட்சியானது கொன்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

குடி அரசு

1946-ஞ ஆகஸ்டு-மீ 10உ

## காங்கரஸ் கட்டுப்பாடு

ஆகஸ்டு 1ந்தேதி சென்னையில் நடந்த காங்கரஸ் சட்டசபைக்கூட்டத்தில் மதுவிலக்கைப்பற்றிய பிரச்சினையின் மீது பெரிய விவாதம் நடந்திருப்பதாகப் பத்திரிக்கைகளில் காணப்படுகின்றது.

விவாதத்தின் தன்மை என்னவென்றால் மதுவிலக்கு சிறிது சிறிதாக நடத்தி சில வருஷங்களில் பூரா மதுவிலக்கு கொண்டுவருவதா அல்லது ஒரேயடியாக மதுவிலக்கு செய்வதா என்பதாகும். இந்த விவாதமானது கட்சிப்பிரச்சினையாக நடைபெற்று இருப்பதாகச் சொல்லலாம் என்றாலும், காங்கரஸ்காரர்களின் பொதுநலக்கொள்கையின் அறிவு, கட்டுப்பாடு எப்படிப்பட்டது என்பது இதில் நன்றாகக்காணக்கிடக்கின்றது. இப்பொழுது பதவியிலிருக்கும் மந்திரிகள் கட்சியாராகிய பிரகாசம்கட்சியார் மதுவிலக்கைச் சிறிதுசிறிதாகக் கொண்டுவர வேண்டும் என்கின்றனர். என்றாலும் அவர்களுக்குள்ளும் ஒரு கட்டுப்பாடான கொள்கை இல்லை என்று தெரிகிறது. எப்படி எனில் மந்திரிகளுக்குள்ளாகவே மாற்றமான திட்டங்கள் வெளியாகின்றன. உதாரணமாக ஒரு மந்திரி "பூர்ண மதுவிலக்கை 10வருஷத்தில் கொண்டு வரலாம்" என்கின்றார். மற்றொரு மந்திரி "3வருடத்தில் பூர்ண மதுவிலக்கைச் செய்யலாம்" என்கின்றார். மற்றும் ஒரு மந்திரி "புதிய வரியைப் போடாமல் மதுவிலக்கைச்செய்யமுடியாது" என்கின்றார். மற்றொரு மந்திரி "மதுவிலக்குக்குப் பணக்கஷ்டம் காரணமல்ல, நிர்வாகக் கஷ்டமும் இருக்கிறது" என்கிறார். இப்படியாக மந்திரிகளே பல கருத்துக்களைத் தனித்தனியாக கொண்டுள்ளனர். இவ்வபிப்பிராயங்களில் மந்திரிகளை ஆதரிப்போருக்குள்ளும் இதுபோலவே கருத்து வேற்றுமைகள் இருந்து வருவதாகத் தெரிகிறது. தோழர் முத்துரங்கமுதலியார் அவர்கள் முதல்மந்திரியாரோடு பதவிக்குப் போட்டிப்போட்டவர் என்றாலும் தோழர்கள் பக்தவத்சலம், பாஷ்யம் ஆகிய மந்திரிகள் தங்கள் பதவி நிலைப்புக்காகக் கருத்துக்கு இசைந்து முதல் மந்திரியை ஆதரிக்கிறார். பாஷ்யம் அவர்கள் "6 மாத காலத்திற்குப்பிறகு மதுவிலக்கு பற்றி புனராலோசனை செய்யலாம்" என்கிறார். மற்றொரு மந்திரியார் "மதுவிலக்கு ஏற்படுத்துவது அவ்வளவு சுலபமான காரியமல்ல" என்று சொல்லுகிறார். காங்கரஸ் சட்டசபை அங்கத்தினர்களுக்குள்ளாகவே மற்ற கட்சியினர் அதாவது ஆச்சாரியார் கோஷ்டியாரும், காமராஜர் கோஷ்டியாரும் "உடனே பூர்ணமதுவிலக்கு 24 ஜில்லாவுக்கு ஆகவேண்டும்" என்கின்றனர். அதுமாத்திரமல்லாமல் மந்திரி கோஷ்டியார் உடனே பூர்ண மதுவிலக்காகக் கொண்டுவர முடியாது என்று சொன்ன காரணங்களுக்கு எல்லாம் தக்க சமாதானம் சொல்லி உடனே கொண்டுவரவேண்டிய அவசியத்தையும் தகுதியையும், மெய்ப்பித்து வருகிறார்கள். பொதுவாக நாட்டில் மந்திரிகளைத் தவிர, மந்திரிகளுக்குக்கட்டுப்பட வேண்டியவர்கள் தவிர, மற்ற யாவரும் குறிப்பாகக் காங்கரஸ் மெம்பர்களிலே மெஜாரிட்டியாரும், ஓட்டர்களும் "பூர்ண மதுவிலக்கை ஆதரித்து அதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்கள். காங்கரசில் முக்கிய பிரச்சாரகர்களாக இருந்து காங்கரசுக்கு வெற்றியும் பெருமையும் தேடிக்கொடுத்த சில தேசிய வீரர்கள் "பூர்ண மதுவிலக்குச்செய்யாவிடில்நாங்கள் பொதுமக்கள் முகத்தில் விழிக்க முடியாது, வீதியில் தலைநிமிர்ந்து நடக்கமுடியாது" என்று சொல்லி பூர்ண மதுவிலக்கை வலியுறுத்துகிறார்கள். இதற்குச்சமாதானமாக மந்திரிகள், மந்திரிகளின் சிஷ்யர்கள், சிப்பந்திகள் ஆகியவர்கள், "பூர்ண மதுவிலக்கை வலியுறுத்துகிறவர்கள் எப்படியாவது எங்களைப் பதவியிலிருந்து விலக்குவதற்கு செய்யும் சூட்சி" என்று சொல்லுகிறார்கள். இவற்றுள் எல்லாம் ஒரு விசேஷமானதும், குறிப்பிடத்தகுந்ததுமான சேதி என்னவென்றால் "பூர்ணமதுவிலக்கைக்கொண்டுவர சாத்தியமில்லையானால் இந்த மதுவிலக்கை கைவிட்டுவிடுவதே மேல்" என்றும், "இம்மாதிரி அரைகுறையாய்ச் செய்வது கெடுதியை விளைவிக்கும்" என்றும் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித்தலைவரும் அவர் அந்தரங்க சிஷ்யர்களும் சொல்லி இருப்பதாகும். இதே கருத்தை பெரியார் சொன்னகாலத்தில் அவரைக் காங்கரஸ் பக்தர்கள் "இராமசாமிஜஸ்டிஸ் கட்சிக்குத் தலைவர், மதுவிலக்கை எதிர்க்கிறார்" என்று கூப்பாடுபோட்டதோடு அவர் செல்லுமிடங்களில் காங்கரஸ்காலிகள் கேள்வி கேட்டவண்ணம் தொல்லை கொடுத்தார்கள். இப்போது காமராஜரே இப்படிச்சொன்னதானது இந்தக் காலிகள் வாய்க்கு ஆப்படித்ததுபோல் ஆய்விட்டதோடு முதல் மந்திரி பிரகாசம் அவர்கள் "காமராஜர்

சொல்லுவதுபோல் இப்போதைக்கு மதுவிலக்கையே நிறுத்திவைத்து அடுத்த வருடம் யோசிக்கலாமா என்று பார்க்கிறேன்" என்பது ஆகவும் சொல்லிவிட்டார்.

இந்த நிலையில் தோழர் ஆச்சாரியார் 'ரிவால்வரை" வைத்துக்கொண்டு பிரகாசத்தை மிரட்டுகிறார்.

அதாவது, "இவ்வருஷமே பூரணமதுவிலக்குக்கொண்டுவரவில்லையானால் கிளர்ச்சிசெய்வேன், மந்திரிசபை கவிழ்ந்துபோகும்" என்று மிரட்டுகிறார்.

காங்கரஸ் சட்டசபை அங்கத்தினர்கள் 100பேர்கள் வரை கையெழுத்திட்டு நம்பிக்கை இல்லாத் தீர்மான நோட்டிஸ் போல் மிரட்டுதல் விண்ணப்பம் வேண்டுகோள் அனுப்பச் செய்துவிட்டார். ஆகவே மதுவிலக்கு என்பது ஓட்டர்களை ஏமாற்ற எப்படி ஒரு சாதனமாய் இருந்துவந்ததோ அதே போல் அது இப்போது காங்கரசுக்குள்ளாகவே கட்சிப் பழி வாங்கவும் பதவியிலிருப்பவர்களைக் கவிழ்த்து கட்சிப் பதவி வேட்டை ஆடவும் நல்லதொரு சாதனமாக ஆகிவிட்டது. இந்த குழப்பத்தின் பயனாய் இவ்வருஷம் மேலும் ஒரு நான்கு ஜில்லாவுக்கு மதுவிலக்கு ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கலாம் போல் இருக்கிறது. அப்படியேற்பட்டால் அதன் பெருமை தோழர் ராஜகோபாலாச்சாரியாரையே சேரும். "முடிசூடா மன்னராய்" விளங்கிய தோழர் காமராஜர் இன்று ஏன் என்று கேட்க ஆளில்லாத அனாமதேயமாக ஆக்கப்பட்டுவிட்டார். அவரால் பதவி பெற்ற மந்திரிகளும் அவரை லட்சியம் செய்வதல்லை என்பது மாத்திரமல்லாமல் "ஆச்சாரியார்நட்புப்பெற அலைகிறார்" என்றும் பார்ப்பன இளவல்களால் கூப்பாடு போடப்படுகிறது. 8 ஜில்லாக்களுக்கு மதுவிலக்கு ஏற்பட்டாலும் 10-ஜில்லாக்களுக்கு மதுவிலக்கு ஏற்பட்டாலும் அதைப்பற்றிய சலுகை எதுவும் காட்டாமல் பிரகாசம் மந்திரிசபையைக் கவிழ்க்க ஆச்சாரியார் முயற்சி செய்வாரென்றும் காமராஜர் அதற்குக்கையாளாக இருப்பார் என்றும் காங்கரஸ் உள்வட்டாரத்தில் இருக்கிறவர்கள் பேசி, சேதி பரப்பி வருகிறார்கள்.

எனவே காங்கரஸ் கட்டுப்பாடு, பொதுநலத் தொண்டு, தியாகிகள் கூட்டம், மகாத்மாக்கள் தலைமை என்பவை எல்லாம் இன்று பதவிவேட்டை, பதவி பொறாமை என்கின்ற தலைமைக்குள்ளாகவே முடிந்துவிட்டன.

மக்களுக்கு எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை. எந்த மந்திரிசபை மாறினாலும் காங்கரசில் எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும் செருப்பு தைத்தவன் போட்டுக்கொள்வதில்லை, வீடு கட்டினவன் குடி இருப்பதில்லை, துணி நெய்தவன் கட்டிக்கொள்வதில்லை; மற்றவர்களுக்கு அவைகளை விற்றுதான் அவர்கள் தங்கள் வயிறை வளர்க்கிறார்கள். அது போல் காங்கரசில் நம்மவர்கள். திராவிடர்கள், தமிழர்கள் எவ்வளவு வேலைத்திறமுள்ள கெட்டிக்காரர்களானாலும் பார்ப்பனர்களுக்குப் ஆரியர்களுக்கு வேலை செய்து வயிறு வளர்க்கவேண்டியவர்களே தவிர தங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை. ஆனால் திராவிட கழகம் அப்படிப்பட்ட ஸ்தாபனமல்ல, அப்படிப்பட்ட கட்சி அல்ல, என்றாலும் திராவிடர் கழகத்தில் திராவிடன் இருக்கும்போது துரோகியாய் சதிகாரனாய், பொறாமைக்காரனாய் இருக்கிறான். காங்கரசுக்குள் சென்றால் அனுமாராய் நடந்துகொள்ளுகிறான். இது தமிழர் இயல்பா?

## தமிழரசைக் காணோம்

3-3-46லிருந்து என் புதல்வன் தமிழரசைக் காணோம். இயக்கத் தோழர்கள் கண்டால் அடியிற்கண்ட விலாசத்துக்குக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாவலர் பாலசுந்திரம்,
பழய அரண்மனைத் தெரு,
கும்பகோணம்.

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

9-6-46ல் வடார்க்காடு மாவட்டம் காயனிசெருவில் வி. பி. கோவிந்தசாமி—சின்னத்தாய் அம்மான், வி. பி. திம்மராயன்—சென்னியம்மாள் ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

o o

5-7-46ல் ஆலம்பட்டுத் தோழர் அ. நாச்சியப்பன் அவர்களும் வேப்பங்குளம் தோழியர் அழகுசௌந்தரி அம்மையாரும் தோழர் வை. சு. சிதம்பரம் அவர்கள் தலைமையில் வாழ்க்கையொப்பந்தம் செய்துகொண்டனர்.

o o

19-6-46ல் தோழர் கே. தனம் அவர்கள் தலைமையில் திருச்சி பெட்டைவாய்த்தலைமையில் தோழர் சண்முகனாரும் தோழியர் சுப்பம்மாளும் வாழ்க்கை ஒப்பந்தம்செய்துகொண்டார்கள். அதன் நினைவாக குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

---

22-7-46ல் பொன்மலை மேலக்கண்டார்கோட்டையில் தோழர் ந. துரைசாமி அவர்கள் தலைமையில் கூடிய உறுப்பினர் கூட்டத்தில் தோழர்களான கா. ஐயம்பெருமாள் தலைவராகவும், ந. துரைசாமி துணைத் தலைவராகவும், பொருளாளராகவும், ச. அருணப்பன் செயலாளராகவும், ப. நாகராசன் துணைச்செயலாளராகவும், 16 செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# ஏகபோக மிராசு

( வை. தி. )

ஓடு தாங்கி நாடுபுகுந்த நயவஞ்சக ஆரியம், நாடாண்ட திராவிட இனத்தை ஓடாளும் இனமாக ஆக்கிவிட்டது, சூழ்ச்சி எனும் கருவியால். அந்த சூழ்ச்சிக் கருவி பற்பல துறைகளிலும் துளைத்துச்சென்று, திராவிடத்தின் அழிவிற்கு வழி செய்தது. ஒரு இனத்தின் உயர்விற்கு உயிர்நாடி கல்வி என்பதை உய்த்து உணர்ந்த ஆரியம் அந்நாடியில் தன் பிடியை இருத்திற்று. பாரெங்கும் தம் அறிவும் திறனும் போற்றப்பட வாழ்ந்த இனம் 'படிப்பு வராத இனமாக' ஆக்கப்பட்டது. 'மதிநுட்பம் மிகுந்த இனமாக' மாறியது ஆரியம். மாவீரர்களையும் மதிவாணர்களையும் விளைவித்த திராவிடக் கழனியில் களைகள் நிரம்பி காளான்கள் பூத்தன. இங்ஙனம் நிகழக் காரணம் என்ன?

பல நூற்றாண்டுகளாக ஆரியர்க்குத் தம் குலத்தொழிலே கல்வியாக இருந்து வந்துள்ளது. திராவிடர்க்குக் கல்வியை எட்டிப் பார்க்க முடியாத வேலிகள் அமைக்கப்பட்டன. ஆரியத்தின் அவ்வலைப்பின்னலில் [illegible] யிட்ட மன்னர்கள் தம் மக்களின் கல்வியெனும் கண்களைத் தீய்க்கும் சட்டம் பிறப்பித்தனர். இதற்கு நாட்டு வரலாற்றில் சான்றுகள் பல உண்டு.

1610ம் ஆண்டில் இராபர்ட் டி நொபிலி என்ற மேலை நாட்டறிஞர் தீட்டிய முடங்கல் நாயக்க மன்னர்களின் ஆட்சியில் கல்வி அமைப்பு எங்ஙனமிருந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

“மதுரையில் 10000 மாணவர்க்கு மேல் இருக்கின்றனர். அவர்களெல்லோரும் பார்ப்பனரே. ஏனென்றால் உயர்தரக்கல்வியினைக் கற்க அவர்களுக்குத்தான் உரிமையுண்டு. மாணவரே தங்கள் ஊணுடைகளைத் தேடிக்கொள்வரென்றால் அவர்கள் படிப்புக் கெடுமென்று பெரிய நாயக்கரும் பிஸ்னகரும் சிறந்த மானியங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவற்றின் வருவாய் ஆசிரியன்மார் சம்பளத்திற்கும் மாணாக்கர் வாழ்க்கைச் செலவிற்கும் போதுமானது' * என்று அக்கடிதம் கூறுகிறது.

பத்தாயிரம் பார்ப்பன மாணவர் உயர்தரக் கல்வி கற்றனர்; எச்செலவும் எத்துன்பமுமின்றி அரசபோகத்துடன்! உடலை வாட்டி வதங்கிப் பிழிந்தெடுத்து, அந்தச் சாற்றை வரிப் பணமாகக்கொடுத்த தமிழர்க்குக் கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டது! இந்தச் செய்தியை யறியும் தன்னுணர்வுடைய எவனுடைய நெஞ்சந்தான் பதறாமல் இருக்கமுடியும்? இங்ஙனம் கல்விகற்கும் உரிமை நாட்டின் உடைமையாளர்க்கு—திராவிட இனத்தவர்கட்கு மறுக்கப்பட்டு 'ஆடுமாடுகள் மேய்த்து அலைந்திங்கு வந்த' கூட்டத்திற்கு அளிக்கப்பட்டது. கைவிரித்து வந்த கயவர் நம்மிடைப் பொய்விரித்து நம்புலன்கள் மறைத்து தமிழ்க்கு விலங்கிட்டு சாயகம்பற்றி நமக்குள உரிமை தமக்கென்றனர். போட்டியின்றி தனியுரிமைபெற்று பன்னெடுங்காலமாக அறிவுத்துறையிலேயே ஊக்கங்கொண்டிருந்த இனம் கல்வியில் 'தகுதியும்' 'திறமையும்' கொண்டதில் என்ன வியப்பிருக்கிறது?

இத்தகைய சூழ்ச்சி பல்லாண்டுகட்கு முன் நடைபெற்றது; நாகரிகம் முதிரா நாளில், மக்கள் விழிப்புணர்வு பெறாத நேரத்தில் நடைபெற்றது என்று சழக்கர் சிலர் வழக்காடுவர். ஆனால் இந்த இருபதாவது நூற்றாண்டில் 'தேசிய' உணர்ச்சியும், 'சுதந்திர' வேட்கையும் அறிவுக்கனலும் வீசுவதாகக் கூறப்படும் இந்நாளில் ஒரு இனத்தின் அறிவுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதுவும் மக்கள் சர்க்காரால் என்றால் இது கற்காலமா, களிமண் காலமா என்ற ஐயம் எழத்தான் செய்கிறது! 'எனக்கும் இனப்பற்று நிறைய உண்டு' என்று கூறிக்கொள்வதில் பெருமை கொள்ளும் திராவிட அமைச்சராலேயே தம் இனத்தைக் கொலை புரியும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நாயக்க மன்னர் ஆட்சியில் ஆரியத்திற்கு அறிவுத்துறையில் அளிக்கப்பட்ட 'ஏகபோக மிராசு' உரிமையை மீண்டும் நிலைநாட்டும் முயற்சியை இன்றும் பிராமண சேவா சங்கங்கள் செய்கின்றன. அன்று மன்னர் மயங்கினர்! இன்று அமைச்சர் பணிகின்றார்!

எதிர்கால திராவிடநாட்டின் சிற்பிகளையும் சமுதாய சேவையாளரையும் தயாரிக்கும் எஞ்சினியரிங் மருத்துவ கல்லூரிகளில் 100க்கு 20 தகுதியும் திறமையுங்கொண்ட மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்ற உத்திரவு' பார்ப்பனர்க்கு 'சர்வபோக மான்யம்' அளிப்பது போன்றதாகும். எதிர்கால சமுதாயத்தின் சீரையழிக்க வல்ல சட்டம் இது. தொழிற் கல்லூரிகளில் மட்டுமல்ல, இத்தகைய அநீதி தாண்டமாடுவது; கலைக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் நூற்றுக்குத் தொண்ணூறு இடங்கள் ஆரியத்திற்கு அளிக்கப்படுகின்றன. இதன் பயனாக பல்லாயிரக்கணக்கான திராவிட மாணவர்களின் கல்வி குலைக்கப்படுகிறது. 'இடமில்லை' என்ற காரணம்காட்டி. அன்று நாயக்க மன்னர் 'பிறர்க்கு உரிமையில்லை' என்று தடுத்தார். இன்று 'இடமில்லை' என்று கூறி மறைமுகமாக ஆரியால்லாதருக்கு அறிவுத் தடை விதிக்கப்படுகிறது. சொல்லால் வேறுபட்டன, ஆனால் முடிவு திராவிடனைத் தாழ்த்துவது ஒன்றே. அன்று நாயக்க மன்னன் பதினாயிரம் பார்ப்பன மாணவர்கட்கு ஊணுடையளித்து கற்கச் செய்தான். இன்றும் உயர்படிப்பிற்கென்று அமெரிக்கா, இங்கிலாந்து தேயங்கட்குப் பதினாயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து பெரும்பான்யான பார்ப்பன மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

பன்னெடுங்காலமாக உறங்கிய தமிழன் தன்மான முரசொலி கேட்டு விழித்துவிட்டான். இனி உறங்கவே மாட்டான்! இத்தகைய அநீதிகளை உணர்ந்த திராவிடமக்களின் உடலில் குருதி கொதிப்பேறிவிட்டது. அது உச்சநிலையை அடைந்தால்,

'பொங்கு தமிழர்க்கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமென சங்கே முழங்கு'

என்ற முரசொலி விரைவில் திக்கெட்டும் முழங்கும் என்று கூறி எச்சரிக்கிறோம்.

---

*History of the Nayaks of Madura By R. Sathiyanatha Iyer. P. 257.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ளைக்கூட்டத்தாரின் காட்டு ராஜாங்க ஆட்சிபோல் நடந்து வருகின்றது.

குடிகளுக்காக—குடிகளின் நன்மைக்காக நாம் ஆட்சி செலுத்துகின்றோம் என்கின்ற உணர்ச்சியேயில்லாமலும், உணர்ச்சி ஏற்படுவதற்கே இடமில்லாமலும், அநேக சமஸ்தானங்கள் இருந்து வருகின்றன.

இந்தியாவில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கு விஸ்தீரணத்திற்கு மேலாகவே சுதேச சமஸ்தான ஆட்சிகளின்கீழ் இருந்து வருகின்றது. அதாவது இந்தியாவின் மொத்தப் பரப்பு (விஸ்தீரணம்) 17,73,000 பதினேழு லட்சத்து எழுபத்தி ஐயாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள தேசம் சுதேச சமஸ்தானங்களின் ஆட்சியின்கீழ் ஆளப்பட்டு வருகின்றது.

சுமார் 8,00,00,000 எட்டுகோடி இந்திய ஜனங்கள் அவ்வாட்சியில் இருந்து வருகின்றனர்.

மேல்கண்ட $6\frac{3}{4}$ லட்சம் சதுரமைல் விஸ்தீரணத்தையும், 8 கோடி ஜனத்தொகையையும் கொண்டதான பரப்புகள் 562 ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டு அவை 562 சுதேச சமஸ்தானங்களாகி 562 அரசர்களால் ஆளப்பட்டு வருகின்றன. இந்த ராஜ்யங்களில் எல்லாம் பெரியது ஹைதராபாத் ராஜ்ஜியமாகும். இதற்கு விஸ்தீரணம் 82,700 சதுரமைல். இதன் ஜனத்தொகை 1,25,00,000 இதன் மொத்த ரிவினியூ வருமானம் (6,50,00000) ஆறரைக்கோடிரூபாய். இதில் ராஜாவாகிய ஹைதராபாத் நவாப்பு தன் சொந்த செலவிற்கு என்று எடுத்துக்கொள்ளும் தொகை (50,00,000) அரைக்கோடி ரூபாயாகும். இது தவிர அந்த நவாப்புக்கு 400 கோடி ரூபாயுள்ள சொந்த சொத்திலிருந்துவரும் வரும்படி வருஷம் ஒன்றுக்கு ஒருகோடி ரூபாயாகும். ஆகவே வருஷம் ஒன்றுக்கு ஒன்றரைகோடி ரூபாயை வரும்படியாக உள்ள ஒரு பெரிய முதலாளியால் (பூஷ்வாவால்) ஹைதராபாத் தேசம் ஆளப்பட்டு வருவதாகும்.

மற்ற சமஸ்தானங்களில் சுமார் 40 சமஸ்தானங்கள்தான் வருஷம் 1க்கு மொத்தத்தில் 10லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட ரிவினியூ வருமானமுடையவைகளாகும். மற்றவைகள் எல்லாம் அதைவிட குறைந்த வரும்படியுடையவைகளேயாகும். சுமார் 400 சமஸ்தானங்கள் வருஷம் ஒன்றுக்கு ரிவினியூ வருமானம் ஒரு லட்ச ரூபாயைவிட குறைந்த வருமானமுடையவையாகும். இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் இவற்றுள் 15சமஸ்தானங்கள் ஒருமைல் விஸ்தீரணத்துக்குக்கூட குறைந்த பரப்புள்ளவைகளாகும். மூன்று சமஸ்தானங்களில் ஒவ்வொன்றிலும் 100 பிரஜைகளைவிடக் குறைவாகயிருக்கின்றார்கள். ஐந்து சமஸ்தானங்களுக்கு ஒவ்வொன்றின் வருஷ வரும்படி ரூபாய் 100வீதம்கூட இல்லாமல் இருக்கிறது.

உதாரணமாக அவச்சார் (Avachar) என்கின்ற சமஸ்தானம் 1-மைல் விஸ்தீரணமும் 32 பிரஜைகளும் 72 ரூபாய் வருஷ ரிவினியூ வருமானமுமுடைய தேசமாகும்.

இப்படிப்பட்ட ராஜாக்கள் தங்கள் தேச ரிவினியூ வரும்படியில் 12ல் ஒருபாகம் முதல சரிபகுதி வரையில் தங்கள் சொந்த செலவுகளுக்கு எடுத்துக்கொண்டு மீதியையும் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்றபடியே பிரஜைகளுக்கென்று செலவழித்துக் கொண்டு இருந்து வருகிறார்கள்.

ஒவ்வொரு சுதேச சமஸ்தான ராஜாக்களின் யோக்கியதைகளை, அதாவது இந்தூர், ஆள்வார், மிஸ்டர் "A" முதலிய ராஜாக்களின் யோக்கியதையை நினைத்துப் பார்த்தோமேயானால் அவர்களது ஆட்சியின் கீழ் மக்கள் குடிகளாய் வாழ்வதைவிட மானம்கெட்ட வாழ்க்கை வேறு ஒன்றும் இல்லை என்றே தோன்றும். உலகில் உள்ள கூடா ஒழுக்கங்கள் எல்லாம் ஒருருவாய்த் திரண்டு வந்தது போன்ற அரசர்கள் எத்தனையோ பேர்கள் நமது சுதேச சமஸ்தானங்களில் இருந்து வருகிறார்கள் என்பது யாரும் அறியாததா?

இவர்களில் சில அரசர்கள் தங்கள் பெண்ஜாதிகளுக்குச் செலவிடும் அளவில் மூன்றில் நாலில் ஒரு பாகம் தொகைகூட தனது பிரஜைகளின் கல்விக்குச் செலவுசெய்யாதவர்களும் தங்களது மோட்டார்கார்களுக்காகச் செலவு செய்யும் தொகையில் பகுதி அல்லது 3ல் ஒருபாகம்கூட தனது தேசப்பிரஜைகளின் சுகாதாரம், வைத்தியம் ஆகியவைகளுக்குச் செலவு செய்யாதவர்களுமாய் இருக்கிறார்கள் என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. சுதேச சமஸ்தானப் பிரஜைகளுக்கு அவர்கள் தங்கள் தேச வரும்படியில் இத்தனையில் ஒருபாகம்தான் தன் சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்ளலாம், இத்தனை பெண்டாட்டிகள்தான் கட்டிக்கொள்ளலாம் என்பதான நிர்ணயமே இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

"இந்தியா சக்கிரவர்த்தியின் சர்வாதிகாரத்திற்கு உட்பட்ட சமஸ்தானங்கள்! என்று வெகு பெருமையாய் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சொல்லிக்கொள்ளுகின்றார்களே ஒழிய அந்த சர்வாதிகாரத்தன்மையை ஒரு சிறிதாவது இந்திய சமஸ்தான அரசர்களின் ஒழுக்கத்துக்கோ, அவர்களது வாழ்க்கை நிலையின் தன்மைக்கோ குடிகளின் க்ஷேமத்தைக் கவனிக்கவேண்டிய அவசியத்துக்கோ செலவழித்ததாகச் சொல்லுவதற்கு இடமே காண முடியாமல் இருந்து வருகின்றது. இந்திய சமஸ்தான அரசர்களில் பெரும்பான்மையானவர்களுடைய நடவடிக்கையும், யோக்கியதையும் அரசாட்சிமுறையும் பார்த்த ஒருவன் எந்தவிதத்தில் அவர்கள் நிலையை வெளியில் எடுத்துச் சொல்லாமல் இருக்கவோ, அவர்களை ஒழிக்க முயற்சி செய்யாமலிருக்கவோ முடியுமென்பது நமக்கு விளங்கவில்லை. 562 பேர்களில் யாரோ ஒன்றிரண்டு சமஸ்தான அரசர்கள் ஒருசமயம் "யோக்கியர்களாக" இருந்தாலும் இருக்கலாம். அதுவும் "கூரை வீட்டின்மீது இருந்துகொண்டு கொள்ளிக்கட்டையை எடுத்து விளையாடிக்கொண்டிருக்கிறானே அவனே எல்லோரிலும் யோக்கியன்" என்று சொல்லுவது போன்ற யோக்கியமாய் இருந்தாலும் இருக்கலாம். இதற்காக அரசர் பெருமானின் சர்வாதிகாரத்துக்கு உட்பட்ட 562 "சமஸ்தான நிர்வாகத்தைப்பற்றி துவேஷங்கொள்ளும்படி யாரும் செய்யக்கூடாது" என்று சட்டம் செய்வது என்றால் லார்டு வில்லிங்டன் துரை மகனாரின் அடக்குமுறைச் சட்டம் என்பவைகளிலெல்லாம் இதுவே தலைசிறந்த உண்மை

யான அடக்குமுறைச் சட்டம் என்றே சொல்லவேண்டி இருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவின் வரி ஆள் ஒன்றுக்கு 6-ரூபாய்வீதம் ஆகின்றது என்றால் அனேக சுதேச சமஸ்தானங்களின் வரி ஆள் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் வசூலாகப்படுகின்றது. ஒரு ஆள் ஒன்றுக்கு 6 ரூபாய்வீதம் வரி வசூலிக்கும் பிரிட்டிஷ் இந்தியாவில் படிப்புக்காக நபர் ஒன்றுக்கு 8 அணா வீதம் செலவழிக்கப்படுகிறது என்றால் ஆள் ஒன்றுக்கு 20ரூபாய் வீதம் வசூலிக்கப்படும் சில சுதேச சமஸ்தானங்களில் படிப்புவிஷயத்தில் ஆள் ஒன்றுக்கு 6அணா வீதமும், 3அணா வீதமும்தான் செலவு செய்கின்றனர். இவர்கள் பெயரை வேண்டுமானாலும் பொதுநலத்தை உத்தேசித்துவெளியிட நமக்கு ஆட்சேபனையில்லை. ஆதலால் முறையே நவ்நகர், கட்ச் முதலாகிய சமஸ்தானங்களாகும். இதுபோல் இன்னும் பல சமஸ்தானங்கள் இருந்து வருகின்றன.

தவிர இந்திய சுதேச சமஸ்தானத்தில் உள்ள எல்லா ராஜாக்களுமே தங்கள் சொந்தச் செலவுக்கென்று எடுத்துக்கொள்ளும் தொகையானது ஐரோப்பிய அரசர்களும், சக்கிரவர்த்திகளும் எடுத்துக்கொள்ளும் விகிதாச்சாரத்தைவிட 60பங்கு 70, 100பங்கு 200, 1000 பங்கு அதிகமாக இருக்கிறது. உதாரணமாக ஐரோப்பா கண்டத்தில் டென்மார்க் தேசத்து அரசருக்கு இருபத்திமூன்றரைகோடிரூபாய் வரி வருஷவருமானம். நமது பிக்கானியர் சமஸ்தான அரசருக்கு வருஷம் 60லட்சம் ரூபாய் வரி வருமானம். ஆனால் டென்மார்க்கு தேச அரசர் வருடம் 7லட்சம் ரூபாயே தனது சொந்த செலவுக்கு எடுத்துக்கொள்கிறார். பிக்கானியர் தேசத்து அரசர் வருடம் பதிமூன்றரை லட்சரூபாய் தனது சொந்த செலவுக்கு எடுத்துக் கொள்ளுகிறார். இதை விகிதாச்சாரம் பார்த்தால் டென்மார்க்கு அரசர் தனது தேசவருமானத்தில் 350ல் ஒரு பாகம் எடுத்துக்கொள்ளுகிறார். பிக்கானியர் சமஸ்தான அரசர் தனது தேசவரும்படியில் 4ல் ஒரு பங்கு தனது சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொள்ளுகிறாரென்று சொல்ல வேண்டியிருக்கிறது. (தொடரும்)

## மதிப்புரை

தீப்பொறி ஆசிரியர், தோழர் எம். எஸ் இராஜன் அவர்கள் எழுதிய "பெண்ணுலகம் அல்லது ஆண்களுக்குச் சவுக்கடி" என்ற நூல் கைவரப்பெற்றோம். பெண்ணுலகத்தை அடிமைப்படுத்திய ஆணுலகத்தின் ஆணவத்தை அடக்குவதற்காகவே இந்நூல் எழுதப்பெற்றுள்ளது என்னலாம். பெண்ணுலகத்திற்கு ஆணுலகம் காட்டிய இந்நிலையையே பெண்ணுலகம் ஆணுலகிற்குக் காட்டி ஆணுலகம் நாணும் வண்ணம் செய்கின்றது. மதம், புராணம், சாத்திரம், கடவுள், வைதிகம் முதலியவற்றால் மக்கள் மடையரானதைக் கண்டிக்குமுறையில் மிக நன்றாக எழுதப்பெற்றுள்ளது. இந்நூலை ஆண் பெண் இருபாலரும் படித்துப் பயன் பெறலாம் என்பது எமது துணிபு. இச்சிறந்த நூலை எழுதிய தோழர் இராஜனை யாம் பாராட்டுகின்றோம். இதன் விலை ரூபாய் 2 கிடைக்குமிடம்: ஸ்ரீ பாரதி புத்தகாலயம், சூளை, சென்னை.

0 0

'உதயம்' உதயமாகிவிட்டது. தோழர் எம். கந்தசாமி அதன் ஆசிரியராவர். உதயம் வாரமொருமுறை வெளியாகும். திராவிடர் கழக கொள்கையைப் பரப்பி திராவிட நாட்டு விடுதலைக்குப் பாடுபடுவதையே குறிக்கோளாகக் கொண்டு 'உதயம்' உதயமாகியுள்ளது என்பது நமது நம்பிக்கை. திராவிடர் ஒவ்வொருவரும் உதயத்தைப் படித்துப் பயன்பெறுவர் என்பது நமது துணிபு. தனிப்பிரதி விலை 0—1—3. கிடைக்குமிடம்: மானேஜர், உதயம், திருவத்திபுரம். N. A

## பொதுக்கூட்டம்

18-7-46ல் நெல்லைமாவட்டம் இராமானுசம் புதூரில் டாக்டர் அம்பேத்கார் வாசகசாலையின் சார்பில் தோழர் பி வ. பெருமாள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், பாபநாசம் ஆண்டாள் கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டோர் சென்றால் தண்டனைக்குள்ளாவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தும், தாழ்த்தப்பட்டவர்களையும், திராவிடர்களையும் புறக்கணித்த பிரிட்டிஷ் தூதுவரின் செயலைக் கண்டித்தும் வாசகசாலைக்குக் குடியரசு போடுவதற்கு ஓராண்டு சந்தா கொடுத்துதவிய தோழர் பி. மாடசாமி அவர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

0 0

4-8-46 மாலை 7மணிக்கு ஈரோடு திராவிட கழகத்தின் சார்பில் காரைவாய்க்கால் மைதானத்தில் தோழர் குப்புசாமி அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஈ.வி.கே. சம்பத், சேலம் கல்லூரி மாணவர் குழந்தையா, எஸ். அப்பாவு, சுப்பையன் ஆகிய தோழர்கள் "இக்கால அரசியலும், திராவிடர் கடமையும்" என்னும் பொருள் குறித்து சொற்பொழிவாற்றினர்.

## மறைவு

"எட்டரையாண்டு நிறையப்பெற்ற என் அன்புள்ள செல்வி தமிழரசி ஒரத்தநாட்டில் 20-7-46 சனியன்று இயற்கையெய்தியதைத் தஞ்சை மாவட்ட தன்மதிப்பியக்கத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். என்று தோழர் டி. சி. அருணாசலம்" அறிவிக்கிறார்.

0 0

24-7-46ல் நன்னிமங்கலம் திராவிடர் கழகச் செயலாளர் என். எம். நாகராசன் அவர்களின் தந்தையார் இயற்கையெய்தியதின் நினைவாக, பல ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது.

## விற்பனைக்கு

"பார்ப்பனப் படுமோச விளக்கம்" என்னும் இந்நூல் டிம்மி 1/8 சைசில் 16பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. சுருக்கமாகப் பாக்களில் மிகத் தெளிவாகவும், அழகாகவும் சொல்லப்பெற்ற இக் கருத்துக்கள் நம் இயக்க மாணவ மணிகளுக்கும், திராவிடத் தோழர்களுக்கும் மிகவும் பயன்படும். விலை 0-3-0. தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-9 அணா தபால் தலை அனுப்புக.

குடி அரசு பதிப்பகம். ஈரோடு.

Edited Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press- 42, Catchery street, ERODE.